# விடியல்

## The Dawn

*மாத இதழ், பொழுது – 29*

*செப்டம்பர், 2011*

*vidiyalmagazhine.blogspot.com*

*vidiyalmagazhine@gmail.com*



*சிறப்பாசிரியர்*
முனைவர் நா. கண்ணன்
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
முனைவர் மா. கார்த்திகேயன்
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
முனைவர் ப. சரவணன்
தமிழ் விரிவுரையாளர்

*ஆசிரியர் குழு*
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்



*வெளியீடு:*

KSR COLLEGE OF ARTS AND SCIENCE

தமிழ்த்துறை,
கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு – 637 215,
நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
***www.ksrcasthamizh.blogspot.com***
***www.ksrcas.edu***


# உள்ளடக்கம்

## குறுங்கட்டுரைகள்


*கூடியம் மலைக்குகை* 02

*சிம்கார்டு* 02


## கட்டுரைகள்


*சங்கரதாஸ் சுவாமிகள்* 03

*வினோபாபாவே* 04

*வ.உ.சிதம்பரம்பிள்ளை* 06

*வெ. சாமிநாதசர்மா* 13

Ernest Rutherford 14

*டாடாவின் நானோ கார் கனவு* 18


## கவிதை


*பசுமைப்புரட்சி* 13


## துளிச்செய்திகள்


*கண்ணீர்ப்புகை* 05

*மீட்டர்* 05

*டெர்பி* 12

*தமிழ்மன்றம்* 10


## மாதம் ஒரு படைப்பாளர்


*எழுத்தாளர் சுந்தர ராமசாமி* 11


▼

# 'கூடியம்' மலைக்குகை

கூடியம் என்பது ஒரு மலைக்குகை. இது முட்டையை உடைத்தாற்போன்ற தோற்றமுடையது. இது திருவள்ளூர்க்கு மேற்கே 30 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இந்த ஊரில் பசமைநிறக் காடுகளும் குறுங்காடுகளும் தைலமரத் தோப்பு களும் மாந்தோப்புகளும் உள்ளன.

வரலாற்றிற்கு முற்பட்ட கால கட்டத்தில் மனித இனம் வாழ்ந்த பகுதியாக இப்பகுதியினைத் தொல்லியல் அறிஞர்கள் சுட்டிக் காட்டு கின்றனர். அம்மனிதர்கள் கற் கருவிகளைப் பயன்படுத்தியதற்கான சான்றுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

இம் மலைக்குகைக்குள் 'மனத்தச் சம்மன்' என்ற தெய்வச்சிலை உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சிவராத்திரி அன்று அப்பகுதி மக்கள் இம்மலைக்குகைக்குச் சென்று, தங்கி இறைவனை வழிபடு கின்றனர்.

**ஏ. கீர்த்தனா,**
முதலாண்டு வேதியியல் துறை.

# சிம்கார்டு

செல்போன்களில் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள சர்வீஸ் புரொவைடர்களால் வழங்கப்படும் ஒரு சிறிய அட்டைக்குப் பெயர் சிம்கார்டு.



சிம் SIM என்பதன் விரிவாக்கம் (Subscriber Indentity Module - SIM). முதல் சிம் கார்டு 1991 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

இதனை முனிச் ஸ்மார்ட கார்டு தயாரிப்பாளர் கீய்செக்கே – டெவ்ரியன்ட் என்பவர் உருவாக் கினர். முதல் 300 சிம் கார்டுகளை பின்லாந்து கம்பியற்ற நெட்வொர்க் வழங்கனர் ரேடியோலின் ஜாவுக்கு விற்றார்.

**ஏ. பாண்டியராஜன்**
முதலாண்டு ஆங்கிலம்

# சங்கரதாஸ் சுவாமிகள்

சங்கரதாஸ் சுவாமிகள் (1867 - 1922) 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழ் நாடக உலகின் தனிப்பெரும் தகைமையர்களாக விளங்கிய சிலருள் குறிப்பிடத்தக்கவர்.

கூத்து மரபிலிருந்து உருவாகி வளர்ந்த தமிழ் நாடக அரங்க வடிவம் பாடல் வடிவத்தோடு இணைத்து எழுதும் மரபில் உருபெற்றது சங்கரதாஸ் சுவாமிகள் காலத்தில் தான். **தமிழ் நாடகத் தலைமை யாசிரியர் என்றும் தமிழ்நாடகத் தந்தை** என அழைக்கப் படுகிறார். 40 மேற்பட்ட நாடக நூல்களை எழுதியுள்ளார்.

சங்கரதாஸ் சுவாமிகள் 68 நாடகங்களை எழுதியுள்ளார். அவற்றில் இப்போது 18 நாடகங்களே கிடைத் திருக்கின்றன.


*1.வள்ளித் திருமணம்*
*2.அல்லி*
*3.அரிச்சந்திரா*
*4.நல்ல தங்காள்*
*5.சத்தியவான் சாவித்திரி*
*6.பவளக்கொடி*
*7.இரணியன்*
*8.சீமந்தனி*
*9.சுலோசனா சதி*
*10.சதி அனுசுயா*
*11.கர்வி பார்ஸ்*
*12.கோவலன் சரித்திரம்*
*13.ஞான சௌந்தரி சரித்திரம்*
*14.சாரங்கதரன்*
*15.அபிமன்யு சுந்திரி*
*16.லவகுசா*
*17.லலிதாங்கி*
*18.பாதுகாபட்டாபிசேகம்*

சங்கரதாஸ் சுவாமிகள் குறித்து விரிவாகப் படிக்க உதவும் நூல்கள் பின்வருமாறு.

1.சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகக் களஞ்சியம், காவ்யா வெளியீடு, கோடம்பாக்கம், சென்னை.

2. சங்கரதாஸ் சுவாமிகள் நாடகத் திரட்டு - பதினெட்டுப் பனுவல்கள், பதிப்பாசிரியர் முனைவர்வீ.அரசு, வல்லினம் பதிப்பகம், புதுச்சேரி–4.

சங்கரதாஸ் சுவாமிகளின் திருவுருவச் சிலை மதுரையில் அமைக்கப் பட்டுள்ளது.




***செப்டம்பர் 5ஆம் நாள் இவரது பிறந்த நாள் கொண்டாடப்படுகின்றது.***

# வினோபாபாவே

வினோபா பாவே (Vinoba Bhave, விநாயக் நரகரி பாவே, செப்டம்பர் 11, 1895 - நவம்பர் 15, 1982) ஒரு இந்திய அறப்போராளி, மனித உரிமைகள் ஆதரவாளர். இவர் மண் கொடை இயக்கத்துக்காக மிகவும் அறியப் படுகிறார். இவரே காந்தியின் ஆன்மீக வாரிசாக கருதப்படுபவர்

இவர் மராட்டிய மாநிலம் மும்பை மாவட்டம் கொலபா எனும் கிராமத்தில் கொங்கணஸ்த் பிராமணர் குலத்தில் நரசிம்புராவ்பாவே, ருக்மணிதேவி தம்பதியருக்குப் பிறந்த மகனாவார். தாய்மொழி - கொங்கணி, மராத்தி. இவரின் சகோதரர்கள் பல்கொபா பாவே, சிவாஜிபாவே இருவரும் சமூக சேவகர்கள்.

வினோபா பாவே சிறந்த இந்துஆன்மீக போதகர், இந்திய விடுதலை போராளி. மகாத்மா காந்தியுடன் இணைந்து இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிர பங்கு கொண்டார்.

இந்தியாவில் பெருநில உரிமை யாளர்கள், நிலம் இல்லா தோருக்கு தானாக முன்வந்து நிலம் கொடையாக அளித்தலை 1951ஆம் ஆண்டு வினோபா பாவேயால் தொடங்கப் பட்டது.

வினோபா பாவே இந்தியா வெங்கும் பயணம் செய்து நிலக்கொடை இயக்கத்துக்காகப் பிரச்சாரம் செய்தார். அவருடைய் சர்வோதயா ஆசிரமம் இவ் வியக்கத்தை ஒருங்கிணைத்து நடத்தியது. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இவ்வியக்கத்தால் கொடையாக சேகரிக்கப்பட்டன.

பகவத் கீதை என்பது இந்து சமயத்தினரின் முக்கிய நூல்களுள் ஒன்றாகும். மகாபாரதத்தில் நடை பெறும் குருச்சேத்திரப் போரில் கிருஷ்ணர், தர்மத்திற்காக போரிடும் பொழுது உறவுமுறைகள் குறுக் கிடக்கூடாது என்பது குறித்து



விளக்கினார். அந்த விளக்கத்தில் தத்துவங்கள், யோகங்கள் போன்றன பற்றியும் தெரிவித்த பகவத் கீதைக்கு வினோபா பாவே உரை எழுதினார்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திர காந்தியின் அவசரகால பிரகடனம், சர்வாதிகார போக்கை கண்டித்தார்.

வினோபா பாவேயின் மிகச்சிறந்த தேசிய சேவைகளை பாராட்டி அவரது மறைவுக்கு பின் 1983இல் பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.

***செப்டம்பர் 11ஆம் நாள் இவரது பிறந்த நாள் கொண்டாடப்படுகின்றது.***

## கண்ணீர்ப் புகை

நமது தோல். மூக்கு, வாய், நுரையீரல் பகுதிகளில் மென்மை யான ஈரப்பதம் நிறைந்த திசுக்கள் உள்ளன. இந்தத் திசுக்களை, சில ரசாயனங்கள் நெருங்கினால் நமக்குக் கண்ணீர், இருமல், போன்ற ஒவ்வாமை ஏற்படும். புரோமோ அசிடோன், பெனாசில் புரோமைடு, ஜைலில் புரோமைடு போன்ற ரசாயனங்கள் மேற்சுட்டிய திசுக்களை ஏரிச்சலடையச் செய்யும் வலிமை பெற்றவை.

இவை பேன்ற ரசாயனங்களைப் பயன்படுத்தித்தான் கண்ணீர் புகை குண்டுகளைத் தயாரிக்கின்றனர். இந்தக் குண்டுகள் வெடிக்கும் போது இந்த ரசாயனங்கலந்த புகை நம்மீத ஊடுருவி நமக்கு ஒவ்வாமையை ஏற்படுத்துகின்றன. இந்த ஒவ்வாகை இரண்டு மணி நேரங்கள் வரை நீடிக்கும்.

**ஏ. பாண்டியராஜன்**
முதலாண்டு ஆங்கிலம்

## மீட்டர்

1791ஆம் ஆண்டு பிரஞ்சு விஞ்ஞானிகள் நீளத்தை அளக்க மீட்டர் என்ற அலகைப் பயன்படுத்தினர்.

பூமியின் வடதுருவத்தில் இருந்து பாரீசுக்கு இடையில் மத்திய கோடு வரை உள்ள தூரத்தை மில்லியனில் பத்தில் பங்கு அளவை ஒரு மீட்டர் என்று விளக்கம் கூறினர். ஆனால், 1909ஆம் ஆண்டு வரை பூமியின் வடதுருவத்திற்கு யாரும் செல்லவில்லை. அதனால், அவர்களது திட்டத்தைச் செயல் படுத்த இயலவில்லை. உடனே பிளாட்டினம், ரேடியம் கலந்த கலவையில் ஓர் உலோகச் சட்டத்தைத் தயாரித்தனர். அதனை மீட்டர் அளவாகக் கொண்டு பயன்படுத்தத் தொடங்கினர்.

**எஸ். கனகவள்ளி,**
முதலாண்டு நுண்ணுயிரியல் துறை.

# வ.உ.சிதம்பரம்பிள்ளை

தமிழ் நாட்டில் உள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் (வன்தனம் என்கிற மிகச்சிறிய கிராமம், ஒட்டப்பிடாரம் அருகில் உள்ளது. இது தான் வ.உ.சி. பிறந்தார்) - ஒட்டப்பிடாரம் எனும் ஊரில் உலகநாதன் பிள்ளை - பார்வதி அம்மை தம்பதியர்களுக்கு மூத்த மகனாக இவர் பிறந்தார். அடிப்படைக் கல்வியை ஓட்டப்பிடாரத்திலும், உயர்நிலைக் கல்வியை தூத்துக்குடியிலும், சட்டக்கல்வியைத் திருச்சியிலும் பெற்று 1895-ல் வழக்கறிஞரானார்.

## தொழில்

உரிமையியல், குற்றவியல் ஆகிய இரண்டு சட்டத் துறைகளிலுமே சிறந்து விளங்கிப் பொருள் குவித்தார். தமிழாராய்ச்சி, தத்துவ ஆராய்ச்சி ஆகியவற்றிலும் ஆர்வம் கொண்டிருந்தார். விவேகபானு என்கிற மாத இதழை நடத்தி வந்தார். சைவ சித்தாந்த சபை, மதுரைத் தமிழ்ச் சங்கம், வாலிபர் சங்கம், பிரம்ம சங்கம் போன்ற சங்கங்களில் உறுப்பினராகித் தன் அறிவுப் பசிக்குத் திசைதோறும் உணவு தேடினார்.



## விடுதலைப் போராட்ட ஈடுபாடு

சென்னையில் விவேகானந்தர் மடத்தைச் சேர்ந்த இராம கிருஷ்ணானந்தரின் சந்திப்பு வ.உ.சி யின் உள்ளத்தில் விடுதலைக் கனலை ஓங்கச் செய்தது. அதன்பிறகே அவர் வாழ்வில் புது அத்தியாயம் தொடங்கியது. தூத்துக்குடி திரும்பியதும், கைத் தொழில்சங்கம், தரும சங்கம், நூல்நூற்பு நிறுவனம், தேசியப் பண்டகசாலை ஆகிய வற்றை நிறுவி சுதேசியம் வளர்க்க ஆரம்பித்தார். வந்தே மாதர முழக்கங்களைத் துணிகளில் எழுதச் செய்து வீதிகள் தோறும் வீடுகள் தோறும் தேசிய உணர்வை வளர்த்தார். பாலகங்காதர திலகரின் விடுதலைப் போராட்டத்தில் மனதைபறிகொடுத்து, இந்திய

சுதந்திரப் போராட்டத்திற்காகப் பாடு பட்டார்.

**கப்பலோட்டிய தமிழன்**

ஆங்கிலேய ஆதிக்கம் கடல்வழி வணிகத்தினால் தான் வளர்ந்தது என்கிற அடிப்படையில், அவர்களை விரட்ட, அவர்களுடைய கப்பல் கம்பெனிக்குப் போட்டியாக, 1906-ஆம் ஆண்டு 'சுதேசி நாவாய்ச் சங்கம்' என்கிற சங்கத்தை நிறுவி அதன் செயலாளர் ஆனார். (அதன் தலைவர் மதுரை தமிழ்ச்சங்கத் தலைவர், வள்ளல் பாண்டித்துரைதேவர் சட்ட ஆலோசகர் சேலம் சி.விஜயராக வாச்சாரியார்). அந்தக் கம்பெனியின் சார்பில் காலியா, லாவோ ஆகிய இரண்டு கப்பல்களை வாங்கி தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து இயக்கத் தொடங்கினார். அதனால் கப்பலோட்டிய தமிழன் என்று அனைவராலும் அழைக்கப்பட்டார்.

**செக்கிழுத்த செம்மல்**

வ. உ. சி. இழுத்த செக்கு சென்னை காந்தி மண்டபத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்த இவருடைய சுதந்தரப் போராட்ட நடவடிக்கைகளால் கோபமடைந்திருந்த ஆங்கிலேய அரசு, 1908ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் நாள் விபின் சந்திரபாலர் விடுதலைக்



கொண்டாட்டத்தின் போது அரசாங் கத்தை அவமதித் ததாகவும்,

சுதந்திரத்திற்காகப் பொது மக்களைத் தூண்டியதாகவும் இவர்மேல் வழக்குப் பதிவு செய்து, இவருக்கு இரட்டை ஆயுள் தண்டனை கொடுத்தது. (அரச நிந்தனைக்கு 20 ஆண்டுகள், சுப்ரமணிய சிவாவுக்கு உடந்தையாக இருந்ததற்கு 20 ஆண்டுகள். மொத்தம் 40 ஆண்டுகள். அதுவும் அந்தமான் சிறையில்). தீர்ப்பளித்தவர் திருநெல் வேலி ஜில்லா செஷன்ஸ் நீதிபதி ஏ.எ.ஃப்.ஃபின்ஹே.

அந்தத் தீர்ப்பினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.



முறையீட்டின் போது அந்தமான் அனுப்ப இயலாது என்பதால் கோவைச் சிறையில் அடைக்கப் பட்டார் வ.உ.சி. அங்கே தான் செக்கிழுக்க வைக்கப்பட்டார். செக்கிழுத்த செம்மல் என்ற பெயரும் இவருக்கு உண்டு. சென்னை உயர் நீதிமன்றம் அவருடைய தண்டனைக் காலத்தைப் பத்தாண்டு களாகவும், லண்டன் பிரிவியூ கவுன்ஸில், ஆறு ஆண்டுகள் கடுங்காவலாகவும் குறைத்தன.

**அரசியல் துறவு**

அவர் சிறையில் இருந்த காலத்திலேயே சுதேசிக் கப்பல் கம்பெனி நொடித்துப் போனது. 1912 ஆம் ஆண்டு டிசம்பரில் அவர் விடுதலை ஆகி வெளியே வந்தார். தூத்துக்குடி செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்ததால் சென்னை செல்ல வேண்டியவரானார். வழக்கறிஞர் பட்டயமும் பறிக்கப்பட்டிருந்தது. சென்னையில் மயிலை, சிந்தாதிரிப் பேட்டை, பெரம்பூர் ஆகிய பகுதிகளில் அரிசி வியாபாரம் செய்து வாழ்ந்தார்.

விடுதலை வரலாற்றில் அந்தக் காலகட்டத்தில் திலகரின் சகாப்தம் முடிந்து காந்தியின் சகாப்தம் வேகம் பெற்றிருந்தது. அதில் வ.உ.சி.க்கு ஈடுபாடு இல்லை என்பதால் கிட்டத்தட்ட அரசியல் துறவு நிலையில் தான் இருந்தார்.

**தமிழ்ப்பணி**

சிறையில் இருந்த நாட்களிலேயே தமிழ் இலக்கிய இலக்கணங்களில் கவனம் செலுத்தத் தொடங்கிய வ.உ.சி. அவர்களால் தமிழன்னைக்குக் கிடைத்த அணிகலன்கள் பல.

1.வ.உ.சிதம்பரம் பிள்ளை தற்சரிதம் (சுயசரிதம்)
2.திருக்குறள் மணக்குடவர் உரைபதிப்பு
3.மனம் போல் வாழ்வு (மொழி பெயர்ப்பு தத்துவ நூல்)
4.அகமே புறம் (தத்துவம்)
5.மெய்யறம் (ஆன்மீகப்புரட்சி நூல்)
6.திருப்பொய்கையார் இன்னிலை (பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. அதன் உரைநூல்)
7.தொல்காப்பியம் இளம்பூரணர் உரைபதிப்பு
8.வலிமைக்கு மார்க்கம் (மொழிபெயர்ப்பு நூல்)
9.சாந்திக்கு மார்க்கம் (தத்துவம்)
10.சிவஞானபோத உரை (சைவ சித்தாந்த உரை நூல்)
11.மெய்யறிவு (அற நூல்)



***கோவை மத்திய சிறைச்சாலையில் உள்ள வ.உ.சி. இழுத்த செக்கு.***

## நீதிபதியின் சான்றிதழ்

'சிதம்பரம்பிள்ளையின் பிரசங்கத்தையும் பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்த பிணம் உயிர் பெற்று எழும். புரட்சி ஓங்கும். அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும்' 1908ஆம் ஆண்டு சிதம்பரனாருக்கு இரட்டை ஆயுள் தண்டனை அளித்த தீர்ப்பில் நீதிபதி ஃபின்ஹே எழுதியுள்ள வரிகளே இவை. வ.உ.சி.யின் விடுதலை வேட்கைக்கும் வேகத்துக்கும் இதனை விடச் சிறந்த அங்கீகாரத்தை வேறு எவரும் தந்துவிட முடியாது.

## நினைவுகள்

இவரின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக எடுக்கப்பட்டது. அந்தத் திரைப்படத்தில் வ.உ.சி பாத்திரத்தில் மறைந்த தமிழ்த் திரைப்பட நடிகர் சிவாஜி கணேசன் நடித்தார்.

தூத்துக்குடியைத் தலைநகராகக் கொண்டு 1986இல் மாவட்டம் உருவாக்கப்பட்ட போது இவருடைய பெயர் அந்த மாவட்டத்துக்கு வைக்கப் பட்டது. இந்திய அரசும் இவரைக் கவுரவித்து அஞ்சல் தலை வெளியிட்டிருக்கின்றது.

இந்திய அரசு தூத்துக்குடி துறை முகத்திற்கு வ. உ. சிதம்பரனார் துறைமுகம் என்று பெயர் வைத்து சிறப்பு செய்துள்ளது.

## வ.உ.சிதம்பரனார் இல்லம்

தமிழ்நாடு அரசு வ.உ. சிதம்பரனார் பிறந்த தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஊரில் வ.உ.சிதம்பரனார் இல்லம் அமைத் துள்ளது. இதில் நூலகம் ஒன்று அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இங்கு வ.உ.சி. அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் புகைப்படங்கள் கண்காட்சியாக வைக்கப்பட்டுள்ளன.

***செப்டம்பர் 5ஆம் நாள் இவரது பிறந்த நாள் கொண்டாடப் படுகின்றது.***

தொகுப்பு:

**சே. கற்பகராஜ்,**

**மூன்றாமாண்டு வணிகவியல் (கணினி).**

# தமிழ்மன்றம்

தமிழ்த்துறையில் தமிழ்மன்றத் தொடக்க விழா 19.08.2011 அன்று நடைபெற்றது.

இவ்விழாவில் சென்னை ஜஸ்டிஸ் பஷீர் அகமது சயீத் மகளிர் கல்லூரித் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இ.சா. பர்வீன் சுல்தானா அவர்கள் 'தமிழ்மொழியும் தமிழ் இலக்கியங்களும் தமிழர்தம் வாழ்விய லாகும்' என்ற கருத்தமைவில் சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவிற்கு முன்னிலை வகித்த கல்லூரிச் செயலர் உயர்திரு ஆர். சீனிவாசன் அவர்கள் குத்து விளக்கேற்றித் தமிழ்மன்றத்தைத் தொடங்கி வைத்தார்.

விழா வாழ்த்துரையில் கல்லூரி முதல்வர் நா. கண்ணன் அவர்கள் கவிதைகள் பல கூறித் தமிழ் மன்றத்தை வாழ்த்தினார். கே.எஸ்.ஆர். தொழில்நுட்பக்கல்லூரி இயற்பியல் துறைப் பேராசிரியர் முனைவர் மோகன் அவர்களும் வாழ்த்துரை நல்கினார்.

சிறப்புரையாற்றிய முனைவர் இ.சா. பர்வீன் சுல்தானா அவர்கள் வாழ்வியல் முறையாகத் தமிழ், தமிழ் இலக்கியத்தை நாம் எற்கவேண்டும் - தமிழர்களின் வரலாறு பேணப்படவில்லை. அழிந்து வருகின்றது. தமிழ்மொழி தான் தமிழர் வரலாறு – சிலப்பதிகாரம் வெறும் கதைஅல்ல. அது தமிழர் தம் வாழ்வியல் பாதை – மாணாக்கர்களுக்குக் கவனச் சிதறல் இருக்கக்கூடாது கவனம் சிதறினால் வாழ்க்கை சிதறும் - தமிழருக்கு மட்டுமே உரிய பெருமைகளுள் ஒன்று தமிழருக்குத் தாய்நாடும் தந்தைநாடும் உண்டு என்பதாகும் எனப் பல அறிவுரைகளை மாணாக்கர்களுக்குக் கூறினார்.

இவ்விழாவில் பேராசிரியர்கள் மாணாக்கர்கள் உள்பட ஏறத்தாழ 450 பேர் பங்கேற்றனர்.

விழாவிற்கு வந்திருந்தோரைத் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் மா. கார்த்திகேயன் அவர்கள் வரவேற்றார். தமிழ் விரிவுரையாளர் முனைவர் ப. சரவணன் நன்றி கூறினார்.

# சுந்தர ராமசாமி

**முனைவர் ப. சரவணன்**
தமிழ் விரிவுரையாளர்

சுந்தர ராமசாமி, (மே 30, 1931 - அக்டோபர் 14, 2005) நவீன தமிழ் இலக்கியத்தின் மிகச் சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவர். இவர் ஒரு நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர் மற்றும் கவிஞர் என்று பல பரிமாணங்களைக் கொண்டிருந்தார். ***பசுவய்யா*** என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதியவர். நவீனத் தமிழ் இலக்கியத்தில், தமிழ் மொழியினைப் பல்வேறு பரிமாணங்களில் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியவை இவர் எழுத்துக்கள்.

இவர், நாகர்கோவில் அருகே உள்ளே தழுவிய மகாதேவர் கோவில் என்ற கிராமத்தில் பிறந்தார். தன் இளைய பருவத்தில், தொ.மு.சி. ரகுநாதனிடம் மிகுந்த ஆர்வத்தைக் கொண்டிருந்தார். தொ.மு.சி-யினால் மார்க்ஸிய தத்துவங்களிலும் ஈர்க்கப் பட்டவராக இருந்தார். பிறகு தொ.மு.சி ஆசிரியராக இருந்த ***சாந்தி*** என்ற பத்திரிகையில் எழுதத் தொடங்கினார்.

**சுந்தர ராமசாமியின் படைப்புகள்**

***நாவல்கள்***

1.ஒரு புளியமரத்தின் கதை
2.ஜே.ஜே. சில குறிப்புகள்
3.குழந்தைகள் பெண்கள் ஆண்கள்

***சிறுகதைகள்***

1.காகங்கள்
2.பல்லக்குத் தூக்கிகள்

***கட்டுரைகள்***

1.காற்றில் கரைந்த பேரோசை
2.விரிவும் ஆழமும் தேடி
3.ந.பிச்சமூர்த்தியின் கலை:மரபும் மனிதநேயமும்
4.தமிழகத்தில் கல்வி: வே.வசந்தி தேவியுடன் ஓர் உரையாடல்
5.இறந்த காலம் பெற்ற உயிர்

***கவிதைத்தொகுதிகள்***

1.நடுநிசி நாய்கள்
2.107 கவிதைகள்

***மொழிபெயர்ப்புகள்***

1.செம்மீன் - தகழி
2.தோட்டியின் மகன் - தகழி

***நினைவோடைகள்***

1.க.நா.சுப்ரமண்யம்
2.சி.சு. செல்லப்பா
3.கிருஷ்ணன் நம்பி
4.ஜீவா

சுந்தர ராமசாமி பெயரிலான விருதுகள்:

1. தமிழ்க் கணிமைக்கான விருது,
2. இளம் படைப்பாளர் விருது.

***தமிழ்க் கணிமைக்கான விருது***

தமிழ்க் கணிமை, தகவல் நுட்பம் துறைகளுக்கான பங்களிப்புகளைக் சிறப்பிக்கும் முகமாக சுந்தர ராமசாமி தமிழ்க் கணிமை விருது ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது. கனடாவின் தமிழ் இலக்கியத் தோட்டம் அமைப்பினால் நிர்வகிக்கப்படும் இந்த விருது காலச்சுவடு அறக்கட்டளையின் பணவுதவியுடன் வழங்கப்படுகிறது. இலக்கியத் தோட்டம் நடத்தும் வருடாந்திர இயல் விருது வழங்கும் விழாவில் இவ்விருதைப் பெறுபவருக்கு ஆயிரம் கனேடிய டாலர்களும் விருதுப் பட்டயமும் வழங்கப்படும். இவ்விருதைப் பெறுபவர் சுயேச்சையான பன்னாட்டு நடுவர் குழுவால் தெரிந்தெடுக்கப் படுகிறார்.

***இளம் படைப்பாளர் விருது***

சுந்தர ராமசாமி நினைவாக ஆண்டுதோறும் இளம் படைப்பாளி ஒருவருக்கு நெய்தல் இலக்கிய அமைப்பு சுந்தர ராமசாமி விருது அளித்து வருகிறது. இலக்கியத்தின் ஏதேனும் ஒரு வகைமையிலோ ஒன்றுக்கு மேற்பட்ட வகைமைகளிலோ முக்கியமான பங்களித்து வரும் இளம் படைப்பாளி ஒருவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. நாற்பது வயதுக்கு உட்பட்டவர்கள் இவ்விருதுக்குப் பரிசீலிக்கப் படுவார்கள். படைப்புத் துறையில் தொடர்ந்து தீவிரமாக இயங்கிவருபவர்களாக அவர்கள் இருப்பது அவசியம். விருதில் பாராட்டுப் பத்திரமும், பத்தாயிரம் ரூபாய் ரொக்கப்பரிசும் அடங்கும்.

## டெர்பி


குதிரைப் பந்தையத்தை ‘டெர்பி’ என அழைப்பர். இப்பெயர் சூட்டப் பட்டு வரலாறு சுவாரசிய மானது.

1780 டெர்பி பகுதிகளில் 12ஆவது அரச குமாரர் தன் நண்பர் சர் சார்லஸ் பன்பரியுடன் உணவு அருந்திக்கொண்டிருந்தார்.

அப்போது இங்கிலாந்தின் சர்ரே என்ற இடத்தில் நடைபெறும் மூன்று வயதுக்கு உட்பட்ட குதிரைக்கார பந்தையத்திற்குப் பணம்கொடுத்தார். யாருடைய பெயரில் பந்தையத்தை நடத்துவது என்பது குறித்து ஒரு நாணயத்தைச் சுண்டினார். அதில் டெர்பி அரசகுமாரர் வென்றார். அது முதல் குதிரைப் பந்தையங்கள் டெர்பி என்றே அழைக்கப் படுகின்றன. இங்கிலாந்தில் மட்டுமே இப்பந்தையம் சரியான உச்சரிப் புடன் ‘டார்பி’ என்று அழைக்கப் படுகின்றது.

**ஏ. கீர்த்தனா,**
முதலாண்டு வேதியியல் துறை.

# வெ. சாமிநாத சர்மா



தமிழில் அரசியல் இலக்கிய முன்னோடியான அமரர் வெ. சாமிநாத சர்மா 80 நூல்களை எழுதியுள்ளார்.

தேசிய, சர்வதேசிய தலைவர்கள், அரசியல் தத்துவங் கள் பற்றிய இவருடைய நூல்கள் தமிழ் மட்டுமே அறிந்தவர்களுக்குக் கலங்கரை விளக்காக அமைந்தன.

எந்த வித வசதிகளும் இல்லாத காலத்தில் இவருடைய எழுத்துகள் புதிய உலகை அறிமுகப்படுத்தின. பிளேட்டோ, ரூஸ்ஸோ, கார்ல் மார்க்ஸ், மாஜினி, ஸன்யாட்ஸென், திலகர், காந்தியடிகள், திரு.வி.க., வ.வே.சு. ஐயர், சுப்பிரமணிய சிவா, பாரதியார் முதலானோரைப்பற்றி இவர் வழங்கியுள்ள வரலாற்றுச் செய்திகள், சிறந்த ஆவணங்களாகும். இவர் தேசிய வாதியாகவும்.

காந்திய வாதியாகவும் இறுதி வரை வாழ்ந்து வழிகாட்டிய எழுத்தாளர். தேசபக்தன், நவசக்தி, ஜோதி மற்றும் சில இதழ்கள் வாயிலாகப் புகழ் பெற்ற பத்திரிகையாளராகத் திகழ்ந்தவர்.

***செப்டம்பர் 17ஆம் நாள் இவரது பிறந்த நாள் கொண்டாடப் படுகின்றது.***

# பசுமைப்புரட்சி

*"பசுமையில்லாத நாடு*
*உயிரில்லாத மனிதனைப் போல.*
*பசுமையில்லாத காடு*
*இல்லையில்லாத மரத்தைப் போல.*
*பசுமையில்லாத பூமி*
*தண்ணீர் இல்லாத தேசம் போல.*
*பசுமையில்லாத வாழ்க்கை*
*ஆக்ஸிஜன் அற்ற காற்று போல.*
*மழையைப் பெருக்கிட*
*வெப்பத்தைக் குறைத்திட*
*ஓசோனைக் காத்திட*
*நிலத்தடி நீரை உயர்த்திட*
*மண்ணின் வளத்தைக் காத்திட*
*ஒன்றாய் போராடிப்*
*பசுமைப் புரட்சி புரிந்திடுவோம்!"*

**சி.கார்த்தி,**
இரண்டாமாண்டு வணிகவியல் (கணினி)
'ஆ' பிரிவு


# Ernest Rutherford

**Ernest Rutherford** was born on August 30, 1871, in Nelson, New Zealand, the fourth child and second son in a family of seven sons and five daughters. His father James Rutherford, a Scottish wheelwright, emigrated to New Zealand with Ernest's grandfather and the whole family in 1842. His mother, *née*Martha Thompson, was an English schoolteacher, who, with her widowed mother, also went to live there in 1855.

Ernest received his early education in Government schools and at the age of 16 entered Nelson Collegiate School. In 1889 he was awarded a University scholarship and he proceeded to the University of New Zealand, Wellington, where he entered Canterbury College. He graduated M.A. in 1893 with a double first in Mathematics and Physical Science and he continued with research work at the College for a short time, receiving the B.Sc. degree the following year. That same year, 1894, he was awarded an 1851 Exhibition Science Scholarship, enabling him to go to Trinity College, Cambridge, as a research student at the Cavendish Laboratory under J.J. Thomson. In 1897 he was awarded the B.A. Research Degree and the Coutts-Trotter Studentship of Trinity College. An opportunity came when the Macdonald Chair of Physics at McGill University, Montreal, became vacant, and in 1898 he left for Canada to take up the post.

Rutherford returned to England in 1907 to become Langworthy Professor of Physics in the University of Manchester, succeeding Sir Arthur Schuster, and in 1919 he accepted an invitation to succeed Sir Joseph Thomson as Cavendish Professor of Physics at Cambridge. He also became Chairman of the Advisory Council, H.M. Government,

Department of Scientific and Industrial Research; Professor of Natural Philosophy, Royal Institution, London; and Director of the Royal Society Mond Laboratory, Cambridge.



Rutherford's first researches, in New Zealand, were concerned with the magnetic properties of iron exposed to high-frequency oscillations, and his thesis was entitled *Magnetization of Iron by High-Frequency Discharges*. He was one of the first to design highly original experiments with high-frequency, alternating currents. His second paper, *Magnetic Viscosity*, was published in the *Transactions of the New Zealand Institute* (1896) and contains a description of a time-apparatus capable of measuring time intervals of a hundred-thousandth of a second.

On his arrival at Cambridge his talents were quickly recognized by Professor Thomson. During his first spell at the Cavendish Laboratory, he invented a detector for electromagnetic waves, an essential feature being an ingenious magnetizing coil containing tiny bundles of magnetized iron wire. He worked jointly with Thomson on the behaviour of the ions observed in gases which had been treated with X-rays, and also, in 1897, on the mobility of ions in relation to the strength of the electric field, and on related topics such as the photoelectric effect. In 1898 he reported the existence of alpha and beta rays in uranium radiation and indicated some of their properties.

In Montreal, there were ample opportunities for research at McGill, and his work on radioactive bodies, particularly on the emission of alpha rays, was continued in the Macdonald Laboratory. With R.B. Owens he studied the "emanation" of thorium and discovered a new noble gas, an isotope of radon, which was later to be known as thoron. Frederick Soddy arrived at McGill in 1900 from Oxford, and he collaborated with Rutherford in creating the "disintegration theory" of radioactivity which regards radioactive phenomena as atomic - not molecular - processes. The theory was supported by a large amount of experimental evidence, a number of new radioactive substances were discovered and their position in the series of transformations was fixed. Otto Hahn, who later discovered atomic fission, worked under Rutherford at the Montreal Laboratory in 1905-06.

At Manchester, Rutherford continued his research on the properties of the radium emanation and of the alpha rays and, in conjunction with H. Geiger, a method of detecting a single alpha particle and counting the number emitted from radium was devised. In 1910, his investigations into the scattering of alpha rays and the nature of the inner structure of the atom which caused such scattering led to the postulation of his concept of the "nucleus", his greatest contribution to physics. According to him practically the whole mass of the atom and at the same time all positive charge of the atom is concentrated in a minute space at the centre. In 1912 Niels Bohrjoined him at Manchester and he adapted Rutherford's nuclear structure to Max Planck's quantum theory and so obtained a theory of atomic structure which, with later improvements, mainly as a result of Heisenberg's concepts, remains valid to this day. In 1913, together with H. G. Moseley, he used cathode rays to

bombard atoms of various elements and showed that the inner structures correspond with a group of lines which characterize the elements. Each element could then be assigned an atomic number and, more important, the properties of each element could be defined by this number. In 1919, during his last year at Manchester, he discovered that the nuclei of certain light elements, such as nitrogen, could be "disintegrated" by the impact of energetic alpha particles coming from some radioactive source, and that during this process fast protons were emitted. Blackett later proved, with the cloud chamber, that the nitrogen in this process was actually transformed into an oxygen isotope, so that Rutherford was the first to deliberately transmute one element into another. G. de Hevesy was also one of Rutherford's collaborators at Manchester.

Rutherford published several books: *Radioactivity* (1904); *Radioact ive Transformations*(1906), being his Silliman Lectures at Yale University; *Radiation from Radioactive Substances*, with James Chadwick and C.D. Ellis (1919, 1930) - a thoroughly documented book which serves as a chronological list of his many papers to learned societies, etc.; *The Electrical Structure of Matter* (1926); *The Artificial Transmutation of the Elements* (1933); *The Newer Alchemy* (1937).

Rutherford was knighted in 1914; he was appointed to the Order of Merit in 1925, and in 1931 he was created First Baron Rutherford of Nelson, New Zealand, and Cambridge. He was elected Fellow of the Royal Society in 1903 and was its President from 1925 to 1930. Amongst his many honours, he was awarded the Rumford Medal (1905) and the Copley Medal (1922) of the Royal Society, the Bressa Prize (1910) of the Turin Academy of Science, the Albert

Medal (1928) of the Royal Society of Arts, the Faraday Medal (1930) of the Institution of Electrical Engineers, the D.Sc. degree of the University of New Zealand, and honorary doctorates from the Universities of Pennsylvania, Wisconsin, McGill, Birmingham, Edinburgh, Melbourne, Yale, Glasgow, Giessen, Copenhagen, Cambridge, Dublin, Durham, Oxford, Liverpool, Toronto, Bristol, Cape Town, London and Leeds.

Rutherford married Mary Newton, only daughter of Arthur and Mary de Renzy Newton, in 1900. Their only child, Eileen, married the physicist R.H. Fowler. Rutherford's chief recreations were golf and motoring. He died in Cambridge on October 19, 1937. His ashes were buried in the nave of Westminster Abbey, just west of Sir Isaac Newton's tomb and by that of Lord Kelvin.

**Thanks : *Nobel Lectures, Chemistry 1901-1921*, Elsevier Publishing Company, Amsterdam, 1966**.

**R. Divya,**
First year Chemistry.

## டாடாவின் நானோ கார் கனவு

ரத்தன் நவால் டாடா இந்தியாவில் பம்பாயில், 1937 ஆம் ஆண்டு டிசம்பர் 28 அன்று பிறந்தவர். ஜாம்சேத்ஜி டாட்டா நிறுவிய, அவரது குடும்பத்தினரின் பிற்கால சந்ததியினரின் தொகுதியாக விரிவாக்கிய தொழில் திரளாக விளங்கும், இந்தியாவின் மிகப்பெரிய தொழிற்திரளான டாடா குழுமத்தின் தற்போதைய தலை வராக உள்ளார். அவர், டாடா ஸ்டீல், டாடா மோட்டார்ஸ், டாடா பவர், டாடா கல்சல்டன்சி சர்வீஸஸ், டாடா டீ, டாடா கெமிக்கல்ஸ், தி இந்தியன் ஹோட்டல்ஸ் கம்பெனி மற்றும் டாடா டெலிசர்வீசஸ் ஆகிய பெரும் டாடா நிறுவனங்களுக்கும் தலைவராக பொறுப்பேற்று உள்ளார்.

ஓர் இலட்சம் ரூபாய் விலையுள்ள ஒரு தானுந்தை மக்களுக்காக தயாரித்து விற்பது ரத்தன் டாடாவின் நீண்ட காலக்கனவாக இருந்தது. (1998 ஆம் ஆண்டில், தோராயமாக 2200 அமெரிக்க டாலர்கள் இன்று 2000 அமெரிக்க டாலர்கள்) வார்ப்புரு:ConvertToUSD. 2008 ஆம் ஆண்டு ஜனவரி 10 அன்று புது தில்லியில் நடைபெற்ற

மோட்டார் வாகனப் பொருட்காட்சியில் அந்த தானுந்தை அறிமுகப் படுத்தியதுடன் அவரது கனவு நனவானது. டாடா நானோ வின் மூன்று மாதிரிகளைக் காட்ச்சிக்கு வைத் தார்கள். ஓர் இலட்சம் ரூபாய் விலையில் ஒரு தானுந்தியை தயாரித்து தனது வாக்குறுதியை ரத்தன் டாடா நிறைவேற்றினார். அத்துடன், தான் வாக்களித்தபடி குறிப்பிட்ட விலையில் தானுந்தை உற்பத்தி செய்ததைக் குறிப்பிடும் வகையில் ‘ஒரு வாக்குறுதி ஒரு வாக்குறுதியே’ என்றும் கூறினார். ஆயினும், காரின் விலை பின்னர் அதிகரித்துள்ளது. அண்மையில் மேற்கு வங்கத்தில் உள்ள சிங்கூரில், நானோ உற்பத்திக்கான அவரது தொழிற் சாலைக்கு மம்தா பானர்ஜி எதிர்ப்பு தெரிவித்தபோது, அம் மாநிலத்தை விட்டு வெளியேற அவர் எடுத்த முடிவை இந்திய வணிக ஊடகங்களும் ஆங்கிலம் பேசும் நடுத்தர வர்க்கமும் வரவேற்றன.

ரத்தன் டாடா, புத்ததேப் பட்டாச்சார்ஜியின் தலைமையிலான இடதுசாரி அரசுடன் சேர்ந்துகொண்டு, மக்களை அவர்களது நிலத்தை விட்டு பலவந்தமாக வெளியேற்றுவதாக பானர்ஜி குற்றம் சாட்டினார்.

மேற்கு வங்கத்தில் சில காலம் இருந்தது சர்ச்சைக்குள்ளான பிறகு, ரத்தன் டாடா தனது குழுவினருடன் 2008 ஆம் ஆண்டு அக்டோபர் 7 அன்று, அவர்களது ஒரு இலட்சம் ரூபாய் நானோ கார் திட்டத்தை அகமதாபாத் அருகே உள்ள சானந்துக்கு மாற்றினர். 2000 கோடி ரூபாய் (20 பில்லியன் ரூபாய்) முதலீட்டில், உலகின் மிக மலிவான கார், தற்காலிகமாக அமைந்த தொழிற்சாலையில் இருந்து குறித்த தேதியில் தயாரித்து வழங்குவோம் என்றும் அறிவித்தார். தொழிற் சாலையை அமைப்பதற்கு, குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி அவருக்கு இலவச நிலம் உள்ளிட்ட பெரும் சலுகைகளை வழங்கினார். மையப் பகுதியில் அமைந்துள்ள 1,100 acres (4.5km ) நிலத்தை விரைவாக ஒதுக்கீடு செய்ததற்காக மோடியை ரத்தன் டாடா பாராட்டினார், நிறுவனத்திற்கு மிகவும் அவசரமாக புதிய இடம் தேவைப்பட்டதால், மாநிலத்தின்



நற்பெயரைக் கணக்கில் கொண்டு அம்மாநிலத்தை தேர்ந் தெடுத்ததாகக் கூறினார்.



நானோ தானுந்து, 2009 ஆம் ஆண்டு மார்ச் 23 அன்று, பல மாதங்களுக்கு முன்னரே செய்த முன்பதிவுகளுடன், மிகுந்த கோலா கலத்திற்கிடையே வெளியானது. இந்தியாவில் பல்வேறு அமைப்புகளில் மூத்த பொறுப்புகளில் பணியாற்றும் ரத்தன் டாடா, வணிகம் மற்றும் தொழில்கள் குறித்த பிரதம மந்திரியின் மன்றத்திலும் உறுப்பினராக உள்ளார். 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று மும்பையில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களுக்குப் பின், ரத்தன் டாடாவை இந்தியாவின் மிகவும் நன்மதிப்பு பெற்ற வணிகத் தலைவர் என்று குறிப்பிட்டு, அவர் அரசியலில் ஈடுபட வேண்டும் என்று போர்ப்ஸ் இதழ் கருத்து வெளியிட்டது.

மிட்சுபிஸி கார்பரேஷன், அமெரிக்க பன்னாட்டுக் குழுமம், ஜேபி மார்கன் சேஸ் மற்றும் பூஸ் ஆலன் ஹாமில்டன் ஆகிய அமைப்புகளின் பன்னாட்டு ஆலோசனை வாரியங்களின் உறுப்பினராக உள்ளமை, ரத்தன் டாடாவின் வெளிநாட்டுத் தொடர்பு களுள் அடங்கும். மேலும் அவர், RAND கார்பரேஷன், தென் கலிபோர்னியா பல்கலைக்கழகம் மற்றும் அவர் கல்வி கற்ற, கார்நெல் பல்கலைக்கழகம் ஆகிய வற்றின் அறங்காவலர் குழு உறுப்பினராகவும் உள்ளார்.

தென்னாப்பிரிக்கக் குடியரசின் பன்னாட்டு முதலீட்டு மன்றத்தின் குழு உறுப்பினராகவும், நியூயார்க் பங்குச் சந்தையின் ஆசிய-பசிபிக் ஆலோசனைக் குழு உறுப்பி னராகவும் அவர் பணியாற்று கிறார். கிழக்கு-மேற்கு மையத்தின் ஆளுகைக் குழுவிலும், RAND's மையத்தின் ஆசிய - பசிபிக் கொள்கை மைய ஆலோசனைக் குழுவிலும் டாடா உறுப்பினராக உள்ளார். மேலும், அவர் பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் நிறுவனத்தின் இந்திய AIDS திட்டத்தின் குழுவிலும் பணியாற்று கிறார்.

**எம். சுகீதா,**

முதலாண்டு வேதியியல்.